**இ.ம.எண்.4/2025**
in
**அ.வ.எண்.94/2018** 26.08.2025

இந்த மனுவானது கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151-ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவானது, தாவா சொத்தை புதிய மற்றும் பழைய அளவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அளவீடு செய்தால் தான் மனுதாரர் பூமியை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க முடியும். எனவே தாவாச் சொத்துக்களை பார்வையிட்டு அளந்து நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இந்த மனுவானது அனுமதிக்கப்படுவதில், தங்களுக்கு ஆட்சேபணையில்லை என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. நீதிமன்ற ஆணையராக திருமதி.சி.சவிதா.,B.Com.,L.L.B., வழக்கறிஞர் அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் தாவா சொத்துக்களை பார்வையிட்டு பழைய மற்றும் புதிய அளவுகளின்படி சர்வேயர் உதவியுடன் ஆய்வு செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து தாவா சொத்தை நில அளவையருடன் அளந்து சொத்துக்களின் அத்துக்கள் பற்றிய நிலையை விளக்கும் வகையில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் நியமனத்தொகையாக ரூ.10,000/- நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்கு செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் நாள்: 24.09.2025

PANDI MAHARAJA RAMAIAH
Digitally signed by PANDI MAHARAJA RAMAIAH
Date: 2025.08.26 16:49:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.